

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், கோவை மண்டல இணை இயக்குநர் (வேலை வாய்ப்பு) அ.ஜோதிமணி, திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம், கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் ச.ராஜசேகர், மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம், பல்லடம் நகர செயலாளர் ந.ராஜேந்திரகுமார், நகர்மன்றத் தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ரே.சுரேஷ் ஆகியோர் உள்ளனர்.



திருவிடைமருதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் திருவிடைமருதூர் தொகுதிக்கு அரசினர் கலை அறிவியல் கல்லூரி துவங்க உத்தரவு பிறப்பித்த தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பரிந்துரை செய்த உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டத்தில் போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இப்பொதுக்கூட்டத்தில் அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், கோவி.அய்யாராசு, க.நசீர்முகமது, சு.ப.தமிழழகன், சுகுமார் சி.அம்பிகாபதி, கோ.க.அண்ணாதுரை, மிசா.என்.மனோகரன், உதயா இரவிசந்திரன், உள்ளூர் டி.கணேசன், பி.கே.ஜெ.சுதாகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள் உள்ளனர்.

# டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளை சொற்பொழிவு!

## ஆ.இராசா எம்.பி. சிறப்புரை! முனைவர் எஸ்.ஏழுமலை தலைமை!

சென்னை, ஏப். 15 - சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் மக்கள் கல்வி அறக்கட்டளை டாக்டர் அம்பேத்கர் அகாடமி இணைந்து நடத்தும் டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளை சொற்பொழிவு இன்று (15.04.2025 - செவ்வாய்) மாலை 3.00 மணியளவில் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு கட்டிடத்தில் நடைபெறுகிறது.

சிறப்பு சொற்பொழிளராக முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி. கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார். சென்னைப் பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் முனைவர் எஸ்.ஏழுமலை தலைமை தாங்குகிறார்.

மேலாண்மை அறங்காவலர், டாக்டர் அம்பேத்கர் அகாடமி சி.செல்லப்பன் ஐ.ஏ.எஸ் ஓய்வு வரவேற்றுப் பேசுகிறார்.

பேராசிரியர் முனைவர் எஸ்.தேவதாஸ் (இணை மேலாண்மை அறங்காவலர், டாக்டர் அம்பேத்கர் அகாடமி) நோக்க உரையாற்றுகிறார்.

முனைவர் ஜி.ராஜசேகர் (துணைத்தலைவர். சென்னைப் பல்கலைக்கழகம்) நன்றி கூறுகிறார்.

தமிழ் மாணவர் மன்றம் சென்னைப் பல்கலைக்கழகம்’ அனவரையும் வருக வருக என வரவேற்கிறது.

### கோவை - திருப்பூர் - ஈரோடு - நீலகிரி பொதுமக்கள்

# தங்கள் பெயரை மாற்றம் செய்து அரசிதழில் வெளியிட திருப்பூரில் புதிதாக கிளை அச்சகம்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர்!

கோவை, ஏப். 15 - தமிழ்நாடு அரசு எழுது பொருள் மற்றும் அச்சுத்துறையின் புதிய கிளை அச்சகத்தை திருப்பூரில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர். கோவை திருப்பூர் ஈரோடு நீலகிரி பொதுமக்கள் தங்கள் பெயர் மாற்றம் செய்து அரசிதழில் வெளியிட புதிதாக துவங்கப்பட்ட கிளை அச்சகத்தில் விண்ணப்பிக்கலாம் என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் கூறினார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள முத்துசாமி & பிரதர்ஸ் இன்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸில் கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்ட அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் புதிய கிளை அச்சகத்தை 11.04.2025 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையர் வெ. ஷோபனா, மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந. தினேஷ்குமார், தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்துறைகளின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, தமிழ்நாடு அரசு எழுது பொருள் மற்றும் அச்சுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது.

இன்றைய தினம் திருப்பூர் மாவட்டத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்ட அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் புதிய கிளை அச்சகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் 10 பணியாளர்களுடன் சிறிய அரசு அச்சகமாக 1831ம் ஆண்டு டிசம்பர் 17ம் நாள் துவங்கப்பட்டது. 193 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. அரசு மைய அச்சகம் சென்னை, அரசு கிளை அச்சகம் மதுரை, சேலம், புதுக்கோட்டை, திருச்சி, விருத்தாச்சலம் ஆகிய இடங்களில் 06 அச்சகங்கள் செயல்பட்டு வருகிறது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் 202425ம் ஆண்டு மானியக்கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட புதிய அரசு கிளை அச்சகம் திருப்பூரில் இன்று திறந்து வைக்கப்படுகிறது. தற்போது இவ்வச்சகத்தில், திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கு மாவட்ட அரசிதழ் வெளியீடு அச்சிடப்படும். மேலும் பொதுமக்களின் பெயர் மாற்றம் குறித்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு அரசிதழில் வெளியிடப்படும். மாவட்ட அரசிதழ்கள், அரசுப்பணியாளர்களின் பணிப்பதிவேடுகள், அரசுத்துறைச் சார்ந்த விதிமுறை புத்தகங்கள், இந்திய அரசியலமைப்பு சட்ட புத்தகங்கள் விற்பனை செய்யப்படும். இவ்வச்சகத்தில் அரசு மருத்துவமனைகளுக்கு தேவையான உள்நோயாளி அனுமதிச் சீட்டு, வெளி நோயாளி அனுமதிச்சீட்டு, நோயாளிகளின் நோய் குறித்த ஆவணப் படிவங்கள் அச்சிடப்படும். திருப்பூரில் அரசு கிளை அச்சகம் 35 பணியாளர்களுடன் செயல்படும். வேளாண்மை துறையின் விதைச் சான்று அட்டைகளை இவ்வச்சகத்திலேயே அச்சிடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தேர்தல் படிவங்கள், உள்ளாட்சி தேர்தல் வாக்குச் சீட்டுகள், பல்கலைக்கழக விடைத்தாள்கள், அரசுத் தேர்வுத்துறை விடைத்தாள்கள் மற்றும் பல்வேறு அரசு அலுவலகங்களுக்குரிய படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்படும். தமிழ்நாடு அரசிதழ்கள், மாவட்ட அரசிதழ்கள், தேர்தல் படிவங்கள், பதிவேடுகள், கையேடுகள் மற்றும் வாக்குச் சீட்டுகள், அரசு தேர்வுத்துறை விடைத்தாள்கள், பல்கலைக்கழக விடைத்தாள்கள் அச்சிடப்படும். அனைத்து அரசுத்துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள், வரவு செலவு திட்ட ஆவணங்கள், சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகள், சட்டமன்றக் குழுக்களின் அறிக்கைகள், அதிரகசிய பணிகள், அரசு நாட்காட்டி மற்றும் நாட் குறிப்பேடுகள், சுகாதாரத்துறை மற்றும் காவல் துறை படிவங்கள் மற்றும் பதிவேடுகள், அரசு வேளாண்மைத்துறைக்குரிய பணிகளான விதைச் சான்றட்டை பணிகள் அச்சிடப்படும் முக்கியத்துவம் வாய்ந்த பணிகளாகும்.

இந்தத்துறையில் பணிபுரியும் 1,460 பணியாளர்களில் 231 நபர்கள் மாற்றுத் திறனாளிகள் ஆவார்கள். 2023 - 2024 நிதியாண்டில் ரூ.56.21 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. 20232024 ஆம் ஆண்டில் 48,592 நபர்கள் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சட்டப் பேரவை கூட்டத்தொடர் நிறைவடைந்த பின்பு வணிக நிறுவனங்களுக்கு தமிழில் பெயர் பலகைகள் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் வரும் மே மாதத்தில் இருந்து விரைவுபடுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அ.தி.மு.க. பாஜக கூட்டணியால் தி.மு.க. கூட்டணிக்கு எந்த பாதிப்பும் இல்லை, கடந்த முறையும் தேர்தலில் ஒன்றாக சந்தித்தவர்கள் தான். அ.தி.மு.க. பாஜக கூட்டணி சந்தர்ப்பவாத கூட்டணி. கோவை, திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த விசைத்தறியாகள் போராட்டம் அறிவித்தனர். திருப்பூர் உண்ணாவிரத போராட்டம் பேச்சு வார்த்தையில் முடிவுக்கு வந்தது. தற்போது கோவை மாவட்டம் சோமனூரில் போராட்டம் நடைபெறுகிறது. தற்போது சட்டப் பேரவை கூட்டத்தொடர் நடந்து வருகிறது. விரைவில் ஜவுளி உற்பத்தியாளர் களிடம் பேசி சுமூகமான முடிவு எட்டப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பெயர் மாற்றத்திக்காக விண்ணப்பித்த நபர்களுக்கு அரசிதழில் வெளியிடப்பட்டதற்கான ஆணையினை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையர் சுந்தரராஜன், அரசு கிளை அச்சக துணை பணி மேலாளர் ராஜ்குமார்,

திருப்பூர் வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்



கோவை மாநகர் மாவட்டம் கழக பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ம.மகுடபதி மறைவெய்தியதையொட்டி அவரது இல்லத்திற்கு தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி நேரில் சென்று அவரின் உடலுக்கு மலரஞ்சலி செய்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டார். இதில் மாவட்டக் கழக செயலாளர்கள் நா.கார்த்திக், தொ.அ.ரவி, தளபதி முருகேசன், முன்னாள அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, வழக்கறிஞர் ராஜீவ்காந்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்தினர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.பி.சக்திவேல் மற்றும் மாநில ஆதி திராவிடர் நலக்குழு தலைவர் கெ.ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் கழக அரசின் மக்கள் நலத்திட்டங்களினால் ஈர்க்கப்பட்டு நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகி கழகத்தில் இணைத்து கொண்டனர்.அவர்களை மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன் கருப்பு சிவப்பு துண்டு அணிவித்து வரவேற்று அறிவுரைகள் வழங்கி பேசினார்.உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு,மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.முனுசாமி,விவசாய அணி துணை அமைப்பாளர்கள் சரவணன்,ராஜா,உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### ஆளுநர் விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தால் தமிழ்நாட்டின் உரிமைகள் காக்கப்பட்டுள்ளது!

# மாநில சுயாட்சிக்கு வடிவத்தை கொடுத்துள்ளார் முதலமைச்சர்!

## புதுக்கோட்டையில் வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் பேட்டி!



புதுக்கோட்டை, ஏப். 15 - புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட வடக்க ராஜ வீதியில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் வடக்கு மாவட்ட திமுக செயலாளர் சே. கே.செல்லபாண்டியன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்:

ஆளுநர் விவகாரத்தில் உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின் மூலம் தமிழ்நாட்டின் உரிமைகள் காக்கப்பட்டுள்ளது, மாநில சுயாட்சிக்கு வடிவத்தை கொடுத்துள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர்.

இந்திய நாட்டில் உள்ள எதிர்கட்சிகள் ஆளக்கூடிய மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருந்து அவர்களையும் காப்பாற்றக்கூடிய தலைவராக தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்ந்து ள்ளார். முதலமைச்சர் என்பதுக்கு அர்த்தமாக தமிழ்நாடு முதலமைச்சர் இருக்கிறார்.

அதிமுக ஆட்சியில் ஜெயலலிதா பெயரை மீன்வள பல்கலைக்கழகத்திற்கு வைக்க வேண்டும் என்ற மசோதாவிற்கும் ஒப்புதல் பெற்று தமிழ்நாட்டில் கட்சிகளை கடந்து எல்லாருக்குமான தலைவராக திகழ்கிறார் என்பது இது ஒரு எடுத்துக்காட்டு.

ஒன்றியத்தில் ஆட்சி செய்து கொண்டு எதிர் கட்சி ஆளும் மாநிலங்களில் ஆளுநரை வைத்துக் கொண்டு ஆட்சி என இரட்டை ஆட்சி முறையை நடத்தி சர்வாதிகாரமாக செயல்பட்டு வந்த பாஜகவிற்கு உச்ச நீதிமன்றம் மூலம் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். பாஜகவிற்கு இந்த தீர்ப்பு மூலம் கடிவாளம் போடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு மட்டும் அல்லாமல் இந்தியாவிற்கே வழிகாட்டியாக மட்டுமல்லாமல் செயலும் செய்து வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

அரசியல் சாசனம் 200ல் அசுன்ஸ் பாசிபுல் என்று உள்ளது. அந்த விதிகளுக்கு முரணாக கிடப்பில் போட்டிருந்தார். தற்போது உச்சநீதிமன்றம் காலவரையறை நிர்ணயித்துள்ளது. இதன் மூலம் அரசியல் சாசன சட்டத்திற்கு உயிர் கொடுத்துள்ளார்.....

இதேபோல் நீட் விவகாரத்திலும் சட்ட போராட்டம் நடத்தி தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்தார்.

### வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய தி.மு.க.சார்பில்,

# பொதுமக்களுக்கு இலவச நீர் மோர் - தண்ணீர் பந்தல்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - எம். பிரபாகரன் திறந்து வைத்தனர்!

பெரம்பலூர், ஏப்.15 - பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம் சார்பில், தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், மேனாள் மத்திய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., வழிகாட்டுதலோடு, வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், கிருஷ்ணாபுரத்தில் பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் கோடைகால நீர், மோர் மற்றும் தண்ணீர் பந்தலை, ஒன்றிய கழகச் செயலாளர் செ.நல்லதம்பி தலைமையில், பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு திறந்து வைத்து, பொதுமக்களுக்கு தர்பூசணி,வெள்ளரி, நீர்,மோர் ஆகியவற்றை வழங்கினார்கள்.இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக அவைத்தலைவர் அம்பேத்கர், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் க.ரமேஷ், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் க. ராமலிங்கம், முன்னாள் ஒன்றிய துணைப்பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ், நகர மருத்துவ அணி அமைப்பாளர் சிலம்பரசன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பிரபாகரன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராமகிருஷ்ணன் கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் தங்கராஜ் மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பரமசிவம், ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் மாயகிருஷ்ணன் ,

முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் கீதா ராமகிருஷ்ணன், குணசேகரன் , மாவட்ட பிரதிநிதிகள் எஷ்.அழகுவேல்,புதூர் மணி, SPS செல்வம், வேப்பந்தட்டை ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.கணேசன், சிவக்குமார், வெங்கலம் ஊராட்சி கிளை கழக செயலாளர்கள் சின்னத்தம்பி, பன்னீர்செல்வம், சரவணன், ஜெயராமன்,சக்திவேல், மணிகண்டன் மற்றும் அனைத்து அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,கழக நிர்வாகிகள், அனைத்து கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கோவை மாநகர் மாவட்டக் கழக

# பொதுக்குழு உறுப்பினர்-வழக்கறிஞர் ம.மகுடபதி மறைவு!

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி நேரில் மலரஞ்சலி!



கோவை, ஏப் 15 – கழக பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ம.மகுடபதி அவர்கள் நேற்று முன்தினம் (1342025 – ஞாயிற்றுக்கிழமை) மதியம் 2.30 மணியளவில், மறைவெய்தியதையொட்டி, வடகோவை காமராஜபுரத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு,

தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்கள் நேரில் சென்று அவரது உடலுக்கு மலரஞ்சலி செய்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டார்.

கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்தனர். கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், முக சட்டத்துறை இணைச்செயலாளர் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி,பபைந்தமிழ்பாரி,தீர்மானக் குழு உறுப்பினர் மு.இரா. செல்வராஜ்,கழக வர்த்தகர் அணி துணைச்செயலாளர் நா.முருகவேல், பெரியகடை வீதி பகுதி 1 திமுக செயலாளர் மார்க்கெட் எம். மனோகரன்,ஆர்.எஸ்.புரம் பகுதி செயலாளர் கார்த்திக் செல்வராஜ், பெரிய கடை வீதி பகுதி 2 செயலாளர் விஜ.பதுருதீன்,பொதுக்குழு உறுப்பினர்கள் மு. மா.ச.முருகன்,ச.கார்த்திகேயன், காந்திபுரம் பகுதி திமுக செயலாளர் ஆர் எம்.சேதுராமன்,மாநகர் மாவட்ட தொண்டர் அணி தலைவர் ஆ.கண்ணன், அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எஸ்.ஜெயக்குமார்,வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் அன்புச் செழியன், அ.ஜார்ஜ்,ஆதிதிராவிடர் நலக்குழு அணி அமைப்பாளர் டெம்போ சிவா, வட்டக் கழகச் செயலாளர்கள் வழக்கறிஞர் ப.ப.சிவகுமார், டவுன் பா. ஆனந்தன்,நா.தங்கவேல், சுரேஷ் நாராயணன், சிவகுமார், கராத்தே வீரமணி கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செய்து மரியாதை செலுத்தினர்.



கோடை வெயிலில் இருந்து பொது மக்களை காக்கின்ற வகையில் திருப்பூர் மத்திய மாவட்டம், நல்லூர் பகுதிக்குட்பட்ட 49 வது வார்டு சுப்பிரமணியம் நகரில் தெற்கு மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.அசோக்குமார் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தலை மத்திய மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர் மோர், தர்ப்பூசணி, குடை உள்ளிட்டவற்றை வழங்கினார். இதில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராசன், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், நல்லூர் பகுதி செயலாளர் மேங்கோ அ. பழனிசாமி, தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ், வடக்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.